


# Mini bites

–ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா

1. ’உன்னுடன் கோபமாய் இருக்கிறேன்’
என்று சொல்லிவிட்டு
சிரிக்கும் அழகு -ஓர் visual verse ! "

#நீள்நட்புயதார்த்தங்கள்

2. " நீண்ட நாட்களாய் சந்திக்காத போதும்
வளரும் இதற்கு நம் குழந்தை
எனப் பெயரிடுவதே சரி. "

3.’’ எப்போதோ சந்தித்த சந்திப்பு ஒன்று
இப்போது பூக்கிறது. மணக்கும் நட்பு வாசம்...! "

4.’’ சந்திக்க நினைத்தவர் இல்லாதபோது
ஒரு நினைவுப்பரிசு ( புத்தகம் ) கைப்பட
எழுதி கொடுத்துவிட்டு செல்லுதல் ஒரு தனி சுகம் ! "

5.’’ ஒவ்வொரு அங்குல நகர்விற்கும் எறும்புகளிடம்
காரணம் உண்டு "

6.’’ அதெப்படி ஒரு குழந்தையால் நமக்குள்
ஒளிந்திருக்கும் குழந்தையை நொடியில் வெளிக்
கொணர முடிகிறது ? “

7. " சந்திக்கிறோம் எனும்போதே முன் ஜென்ம,
அடுத்த ஜென்ம தொடர்புகள் அநேகமாய்
உறுதியாகி, ஒவ்வொரு முடிச்சாய் அவிழ்கின்றன "

8. " உன் நட்பின் எல்லையாக எதையோ
நீ மனதிற்குள் வைத்தால், நீ கொண்டிருப்பதன்
பெயர் நட்பு அல்ல. "

9.'' ஐஸ் கிரீம் என்பது தொண்டைக்கு பின்
பயணிக்கும்போதும் இனிக்கிறது - என்ன மாயமோ ? "

10.'' மற்றவர்களை கரை சேர்ப்பதன் மூலம்,
கலங்கரை விளக்கம் தன் இருப்பை
மெய்ப்பிக்கிறது - ஏதும் பேசாமலே ! "

11.'' இரவு நேர தூக்கத்தில், மனம் நிறைவு
என்பது அழகிய தீவின் இருப்பு - கனவிலும் ! "

12.'' நாகரிகமாக பேசுவது என்பது
beautiful & stylish வார்த்தைகளை
select செய்வதில் இல்லை. எண்ணங்களில்
cleanliness கொண்டுவருவதில் இருக்கிறது ! "

13. " வாழ்க்கை முழுக்க கட்டப்போவதும்,
வாழப்போவதும் ஒரே வீட்டில் மட்டுமே என்பவருக்கு
அந்த வீட்டினை அங்குலம் அங்குலமாக பிடிக்கும். "

14. தினப் பயணங்களின்
நம்பிக்கை சாட்சிகள்
புகைப்படங்கள் !

15. " கேளிக்கைகள்,கொண்டாட்டங்கள் மட்டுமல்ல,
சோகங்களும் ... வெளிச்சப்புள்ளிகளே.
நீ இருளாக இருக்கும் வரை மட்டுமே
அவை பிரகாசிக்கும். உன் வெளிச்சம்
வெளி வரும்போது அவை தடமின்றி அழியும் "

16. " இலக்கணப்படி வாழ்தல் என்று ஒன்று இல்லவே இல்லை.
நீ வாழும் முறையே இலக்கணம்.
நினைவில் கொள். "

17. " மெல்லிய திரை சொல்லும் உன் கம்பீரத்தை. திரை
கொண்டு வாழ்தல் பழகு. "

18. " இடைவெளிகள் இல்லை எனில் புள்ளிகளுக்கு அர்த்தம்
இல்லை "

19. " தேவையை மட்டும் கேட்டுப் பெற்றுக்கொள். மீதியெல்லாம்
யாரோ மற்றவருக்கு. "

20. " உன் இசைக்கு தகுந்த பறவைகள் உன்னை நோக்கி வரும்.
"

21. கொஞ்சம் பெருமையும்
கொஞ்சம் மகிழ்ச்சியும்
நிறைய நிறைவுமாக
உலகம் நகர்கிறது ...
எப்போதோ விதைத்த விதையின்
இப்போதைய விஸ்வரூபம் !

22. என்னை அணைக்கும்
கம்பளி ஆடைக்குள்
புகுந்த குளிரை
வெளியேற்ற முடியாமல்
தன்னை இழந்து
நிற்கும் வெம்மை !

23. வட இந்திய குளிரில்
ஐந்து ரூபாய் தேநீரை
இரு உள்ளங்கைகளுக்குள்
சூடேற குடிக்கும்
முண்டாசு கட்டிய
வாகன ஓட்டிகளுக்கு
மத்தியில்
நவீன உடையில்
தனியாக தெரியும் நான் !

24. மழையின்
மெது இயக்க
பயணம் ...
மரத்தில் இருந்து !

25. வெளியே
வாகனம் ...
உள்ளே
நான் ....
ஓய்விற்கு
அறை சாட்சி !

26. அந்த நெடுந்தூர
சாலையின் இருளை
வாகன வெளிச்சம் கொண்டு
அகற்றும் தன் முயற்சியில்
சற்றும் மனம் தளரா
விக்ரமாதித்......

27. " மௌனமாய்த்தான் இருந்தோம். ஆனால் ..எவ்வளவு பேசிவிட்டோம் ? காத்திருத்தலின் எல்லையோ இந்த மனநிலை ! "

28. " முன்பெப்போதும் காணாத அளவிற்கு
நிறைய நட்சத்திரங்கள் வானெங்கும் ... அதற்கு ஈடாக மகிழ்வு மனதிலும் "

29. " சில நாட்கள் கவிதைகள்.
சில நேரங்கள் அழகிய நினைவுகள்.
சில பொழுதுகள் ஹைகூக்கள்.
சில புகைப்படங்கள் ஓவியங்கள். "

30. " பார்வைகள் புரியும்போது பேச்சுகள் மௌனமாவது இயற்கை. "

31. பேருந்துகள்
பெருமூச்சுகளை
இறக்கிவிட்டு
எதிர்பார்ப்புகளை
ஏற்றிக் கொள்கின்றன.

32. அம்புகளுக்கு ...
இலக்குகள்
பற்றிய அறிவு
அவசியமில்லை !

33. ஒரே ஒரு புள்ளி ...
மொத்த கதையும்
முடிவுக்கு வரும் அதிசயம் !

34. நட்புகளில்
உறவை போல்
நீண்ட கால தொடர்புகள்
அபூர்வம் !

35. உறவுகளில்
தன்னம்பிக்கை ஊட்டும்
மனிதம் அபூர்வம் !

36. உங்கள் வேலைகளை
நீங்கள் கவனிக்கும்போது
நீங்கள் விதைத்த விதைகள்
தானாக மரமாக மாறும் ...

ஆம்....
ஒருநாள் நீங்கள்
அங்கே
இளைப்பாற
கண்டிப்பாக வரவேண்டியிருக்கும் !

37. நகரும் வண்ணத்துப்பூச்சி..
நகரா மலர்கள் ..
எல்லாம் சரியாகவே.

38. ஒரு முற்றுப்புள்ளியும்
கொஞ்சம் மௌனமும்
இப்போதைய தேவைகள்...
எப்போதையதும் அவையே !

39. எதுவும் நமக்கில்லை
என்னும்போது
எல்லாவற்றையும்
எல்லாரையும்
மிகவும் பிடிக்கிறது.

40. எழுந்து செல்லும்போது
தரையில் மிச்சம் வைத்த
உடல் வெப்பம்
உடன் மறைவதில்லை.

41. சுவாசத்தில் பங்கு இல்லை.
ஆன்ம உலகம் அப்படித்தான் இயங்குகிறது.

42. ஓர் புள்ளியை கடக்க கிடைக்கும் உதவிக்கு நன்றியாக,
உதவி செய்த மனிதப் பெயரினை.. புள்ளிக்கு சூட்டி மகிழ்.

43. நிதானம் கொள்.
உள்ளுணர்வு கேள்.
நகர்தல் பழகு.
புன்னகை சேர்.
விழி திறந்த தியானம் பயில்.

44. மதியமும் ரம்மியமே ..
அழகான ஒற்றை
மரத்தின் நிழலில் !

45. அருவியில் குளித்துவிட்டு ...
ஆகாயம் வளர்
ஆணவ மரங்களுக்கு நடுவில் ...
ஆழ் புகைப்பட நினைவுகளுடன் .... !

46. தேவயைற்றதில் மரிப்போம்.
தேவையானதுடன் எழுவோம்.
உலகம் எதையோ கொண்டாடட்டும்.
நம்மை கொண்டாடுதல் மிக முக்கியம் !

47. கொஞ்சம் சாதித்தபின்
அடுத்து சாதிக்கும் வரை
அந்த திமிர் நம்முடன் இருக்கட்டும் .. இல்லாது போல் நடிப்பதை விட இது சாலச்சிறந்தது...
ஆம். மற்றவருக்கு பாதிப்பு ஏற்படுத்தாத திமிரைத்தான் சொல்கிறேன்.

48. ஒரு பக்கமே புத்தகம் அல்ல.

ஒரு பக்கம் இல்லை எனினும் அது புத்தகமே.

ஒரே ஒரு பக்கம் கதையை முடிவு செய்து விடாது.

மற்ற பக்கங்களை சரியாக படிக்கும்போது, விடுபட்ட ஒரு பக்கத்தில் என்ன நடந்திருக்கும் என்பதை உணர முடியும்.

வாழ்க்கை வாழ்வதற்கே !

49. தனித்திரு.
பசித்திரு.
விழித்திரு.

உதவிடு.
கடந்திடு.
மறந்திடு.

எல்லையிடு.
விலகிவிடு
நகர்ந்திடு.

50. இந்த கடலுக்கு
என்ன அப்படி ஓர் அவசரம் ....?
அந்த தடங்கள் தான்
கொஞ்ச நேரம் வாழட்டுமே ... !

#வாழ்க்கை

51.அருகில்
உன் இருப்பு வேண்டியதில்லை
என்று பறை சாற்றும் தைரியம்
அந்த உறவிற்குள் மட்டும்
எப்படி வருகிறது ?

52. இப்படி ஒரு reality
உலகத்தில்
நீ எப்படி virtual
கவிதையாகிப் போகிறாய் ?

53.பிடித்தவர்களின்
பிடிவாதம்
பிடித்து போகிறது....
ஒரு எல்லைக்கு மேலும்.

54. நட்சத்திரங்களுடன்
நடக்கும்போது..
சாலை
மேக மென்மையில்.

55. அந்த
ஒன்றுமற்ற
இடைவெளியில் தான்
எல்லாமும் நடக்கிறது.

56. தேன் குடித்த நாக்கு
மூடிய இதழ்களுக்குள்
மீண்டும் சுவைக்கிறது ....
எச்சில் நினைவுகளை.

57.யாருமற்ற தேசிய
நெடுஞ்சாலை ...
அதிகாலையில்
நடக்கும் மனிதர்களுக்கு
மட்டுமோ ?

58. ங்க களை
கழற்றிய பின்
அவளை பார்த்தேன்.

59. குப்பைகளும்
குப்பைமேனிகளும்
அதனதன் இயல்பில் ...
ஒன்றை ஒன்று
சார்பினும்.

60. வயலின்
நாற்றங்கால்கள்
வளரும்போது ...
நற்றவர்களை
துளியும்
எதிர்பார்ப்பதில்லை.

61. இக்கரையின்
பச்சைக்கே
இந்த ஜென்மம்
போதாது எனும்போது...

62. சிரித்துக் கொண்டிருக்கும்
சிலையும்
உருவாக்கத்தில்
வாங்கிய அடியை
ஞாபகம் கொண்டிருக்கும்.

63. இருப்பில்
கவனம் கொள்..
மாறும் காற்றை
மனம் பழகும்.

64. வேர்கள்
அதன் இயல்பில்
இருக்கும்வரை ....
தங்களுக்கு ஏற்படும்
காயங்களை பற்றி
கவலைப்படுவதில்லை.....
மரங்கள் !

65. ஒரு புல்லாங்குழல்
தன்னை இழக்காமல்
இசை எழுப்புகிறது.

66. சட்டென தோன்றிய
ஓர் சலனத்தை,
நிதானம் அணைத்ததில்,
கிடைத்த மௌனம்...
இவ்வுலகின்
கிடைக்கா வரம் !

67. யாருமற்ற பின்னிரவு.....
எடுப்பார் கைப்பிள்ளை
ஆகிவிடுமோ ?

68. எதிர்ப்பும்
நன்மையே .....
அணைக்கட்டு.

69. வெளிப்பார்வைகளின்
பாதுகாப்பு
உள்பார்வையின்
சிறை உணர்வு ..
அரண்.

70. எதற்கும்
ஒரு ஆரம்பம்
தேவை..
ஆம்..
எதற்கும்.

71. பொறுப்புகளை
ஏற்கும்போது
வெளிவருகிறது
Real Face.

72. ஏதோ காரணங்கள்
வாழப் பிடிக்கவில்லையெனில்...
ஏதோ காரணங்கள்
வாழ வேண்டுமெனில்.

73. நேரங்கள்
கடினமாகும்போது
முகமூடிகள்
அவிழ்கின்றன.

74. உடல் தவிர்த்த
உளம் நினைந்த
நல் நோக்க உறவு
ஒன்று உண்டெனில் ....

75. உணர்வுகளை
அகத்தில்
ஜீரணிக்கும்போது
உள்ளங்கள்
காட்சிக்கு.. .

76. தோல் கடந்த
தோழமை கலக்கும்
உறவுகள் ....
உலகம்
ஒன்று உண்டெனில்
நாம் அங்கு சந்திப்போம்.

77. விழிகளில் தெரியும் உண்மையை
காதலித்தால்,
விழியில் இருந்து
விலகி இருந்தாலும் ....

78. கடலில்
வெளி தெரியும்
சிறு பாறைகளின்
தெரியா பெருமலைகள்
என் பார்வையில்
எப்போதும் ..

80. முதுகெலும்பில்
சுற்றப்பட்ட
சதையும் இரத்தமும்
இயங்கும் கட்டளைகள்
ஆழ்மனத்திலிருந்து
இருந்து வந்ததாக
இருப்பின் .....

81. கண்களால் சிரித்து
நாம் நகர்ந்த பின்
அங்கேயே
நின்றுகொண்டிருக்கும்
மௌனத்திற்கு
என்ன பெயரிட ?

82. பக்கத்து இருக்கை
நட்பின்
தூர விரல்கள்....

83. சத்தமில்லா
சிரிப்பும்..
மகிழ் நிறை
மெளனமும்..
இந்த பிறப்பின்
இனிய சம்பாத்யங்கள் ...

84. கரை கட்டப்பட்ட
சிறு குளத்தில்
ஒற்றை புள்ளியின்
நீள் இயக்கத்தை ....
சாட்சியாய் கவனிக்கும்
வானம் ...
சாட்சியற்று பறக்கும்
பறவை ..
மெளன சாட்சியாய்
மலை..
பேசா சாட்சிகள்
நிறை உலகில்
கனியும் காலையில் ...

#ஓர்நாடோடியின்அனுபவம்

85. இன்று எது
உன்னுடையதோ
அது
நாளையும்
நாளை மறு தினமும்
உயிர் உள்ளவரையும்
உன்னுடையதே....

86. தூக்கம்
தழுவிக்கொள்வதால்
தனிமை என்று ஒன்று
இல்லவே இல்லை.

87. Mute செய்யப்பட்ட
Slow motion
காட்சிகளாய்
திரையில் இருந்து
மறைகிறது
ஓர் பிரிவு...

88. ஒரு நொடியின்
கைபேசி வெள்ளை வெளிச்சம்...
ஒரு முகத்தின் பரபரப்பு...
ஒரு sudden சிரிப்பு....
அறைகளின் இரவுகள்.

89. வானை
போர்வையாக்கு....
அனைத்தும் உன்
சொந்தமாகும்
அதிசயம் காண்.

90. ஒரு புள்ளியில்
இணைந்துவிட்டு
மீண்டும்
பயணிக்கும்போது
’ என்ன சத்தம் இந்த நேரம் ... ’

91. பேசிக்கொண்டிருக்கும்
யார் யாரையோ
மௌனமாய் கவனிக்கும்
மென் இருக்கை
புத்தனின் representation ஓ ?

92.கடந்து விடு ...
Witness எப்போதும்
Subject ஆக
வாய்ப்பில்லை
கடந்து விடு...

93. என்ன செய்தாலும்
அந்த அமைதியை
விலை கொடுத்து
வாங்க முடியவில்லை ...
ஆனால்
விலை இன்றி
எடுத்து செல்ல முடிகிறது !

#நிர்வாணாபுரிதல்கள்

94. சாலைகளில்
உன்னை தேடுவதை
நிறுத்தி வெகு நாளாகிறது...
சாலையே மிகச்சிறந்த
நண்பியாக
மாறிப்போனதால் !

95.நீ
வெளியேறியதில்
உயிரற்ற அது
மோகமாக பார்த்தது...
ஆம்
தலையணைக்கும்
தேவைப்படுகிறது
என் நடு மார்பின்
இளஞ் சூடு.

96\. சூழ்நிலை
கவிதையாக
உருமாறிய பின்
எழுதிய
அவன் அவள்
அங்கு தேவை இல்லை.

97.பொய்யின்
ஆயிரம்
பூட்டுகளுக்கு
ஒரே ஒரு
மெய் சாவியின்
கோபம்
போதுமானது !

98.எந்த
சூழ்நிலையிலும்
பௌர்ணமி
காலில் விழுவதில்லை..
பிம்பத்தை பார்த்து
காலில் விழுவதாய்
முடிவெடுத்தால் ......!

99. சிவனுக்கு
மூன்றாவது கண்ணை
மொத்தமாக
யாரும்
எழுதிக் கொடுத்துவிடவில்லை ...
உன்னில்
என்னில்
நம்மில்
யாரோ ஒருவருக்கு
அந்த கண்
அவ்வப்போது
எழும்புவதை
கவனித்து
கடந்து விடு.

100.சாட்சிக் காற்றே...
எம் நட்பிற்கும்
எமக்கும் இடையில்
நீ எப்போதும்
வாழ்வதை
மனிதர்களிடம் சொல்.
எம் கம்பீரம்
உன் மூலம் விளங்கட்டும்.

101. தேவைப்படவும் இல்லை
கொடுக்கவும் இல்லை
அப்படியும்
அழகாய்
எதிரெதிர் நிற்கும்
தோள் பட்டை
கம்பீரங்கள்.

102. மூங்கில்
காற்றின்
குளிரும்,
ஏதோ ஒரு
பொழுதினில்
சூடாகும்.

103. Mini வாழ்வின்
Mini theories....
அழகான புரிதலே
ஆளத் தொடங்கும்.

104. நீள் தனிப் பயணத்தின்
நீங்கா பச்சை நினைவுகள்
பதறாமல் பின்னே செல்லும்
பூமியின் மௌனம் போல்
உள்ளிருக்கும் உல்லாசமாய்
உடன் சிரித்து வருவது ..
வாழும் வரம்.

**105. உச்சரிக்கா சொற்களில்**
**வசதியாய் வாழ்கிறது**
**என் personal பக்கங்கள் !**

***********